# <u>குழித்துறை நகராட்சி</u>

<u>குழித்துறை நகர்மன்றத்தின் 27-08-2021 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்</u>

<u>பொருள் எண்.1</u>

திருமதி.சி. றோஸ்சிலின் ரெஸீலா என்பவர் மாவட்ட ஆட்சியாளர், நகராட்சி ஆணையர் மற்றும் 2 பேர் மீது மதுரை உயர்நீதி மன்ற கிளையில் WP(MD)No.4257/2021-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் வழக்காடியமைக்கு ரூ.10,000/- மட்டும் வழக்கறிஞர் கட்டணம் கேட்டுள்ளார். எனவே மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3715**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.2</u>**

குழித்துறை நகரம் புல எண்.D3/47- நிலவியல் பாதை தொடர்பாக திரு.பி. ஜாஸ்பின் பினோ என்பவர் மாவட்ட ஆட்சியாளர், நகராட்சி ஆணையாளர் மற்றும் 5 பேர்கள் கட்சி சேர்த்து சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் WP(MD) No.11565 of 2018-ன்படி வழக்கு தொடர்ந்து 06-09-2019 அன்று நீதிமன்ற தீர்ப்பு பெற்றுள்ளார். மேற்படி நீதிமன்ற தீர்ப்பு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.335/2021-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகியமைக்கு வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் என்பவர் ரூ.10,000/- வழக்கறிஞர் கட்டணமாக கேட்டுள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
F.No.1448/2018/TP

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3716**

**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.3**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஏலம் போகாத கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பாக.

I. 1.காய்கறி சந்தைக்குள் ஆடு, கோழி அடிக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

i. திரு.C. செல்வமணி, த/பெ. செல்லப்பன், மேலே குழிவட்டம், மருதங்கோடு அஞ்சல் — ஓராண்டு குத்தகை தொகை ரூ.42,500/-

2. வி.எல்.சி. கலையரங்கம் குத்தகை உரிமம்

i. திரு. சுரேஷ், L.B. த.பெ. லூக்காஸ், கொடுங்குளம், மார்த்தாண்டம். — ஓராண்டு குத்தகை தொகை ரூ.3,92,000/-

ii. திரு.M. வினில்ராஜ், த.பெ. முத்துகிருஷ்ணன், செக்காலவிளை, படந்தாலுமூடு. — ஓராண்டு குத்தகை தொகை ரூ.3,93,000/-

II. 1. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B7

i. திரு. ஜெயமாலினி, மாலன்விளை, விரிகோடு அஞ்சல். — வருட வாடகை ரூ.5,900/-

ii. திரு.செல்வகுமார், மாலன்விளை, விரிகோடு. — வருட வாடகை ரூ.6,050/-

2. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B14

i. திருமதி. செல்வி, நெடும் போக்குவிளை, மார்த்தாண்டம். — வருட வாடகை ரூ.5,800/-

ii. திரு.P. பிரவின், நல்லூர், மார்த்தாண்டம்.　　வருட வாடகை ரூ.6,050/-

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வருடாந்திர குத்தகை இனங்களான மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் ஆடு, கோழி அடிக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் குழித்துறை வி.எல்.சி. கலையரங்கம் குத்தகை உரிமம் ஆகிய இனங்கள் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதால் மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடைகள் B7 மற்றும் B14-க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு உரிமம் ஒப்புக் கொள்ளலாம்.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2036/2018/அ2

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3717**

1) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடைகள் 87 மற்றும் B14 ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.
2) ஆடு, கோழி கட்டணம் வசூல் உரிமம் மற்றும் VLC மண்டபம் ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக உள்ளதால் மறு ஏலம் கோர அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்.4</u>**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு பெற்ற திரு. சுரேஷ் 2017-2018-ம் ஆண்டு செய்த பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.17052/- (EMD) காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1267/2020/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3718**

**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.5**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B6-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.T.N. கோதை ஆண்டாள் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.T.N. கோதை ஆண்டாள் | 2017-2018 | B6 | 100000 | Page No.234, Sl.No.220, Vol.5 |

ந.க.எண்.1263/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3719**
**அனுமதிக்கப்படுறது.**

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மினி பாரா உந்து நிலையம் குத்தகைக்கு எடுத்துள்ள திரு.T. ஷாஜி குமார் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.T. ஷாஜி குமார் | 2017-2018 | மினி பாரா உந்து நிலையம் | 18111 | Page No.235, Sl.No.131 Vol.5 |

ந.க.எண்.1411/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3720**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.7</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN.74W.0236-க்கு 2021-2022-ம் வருடத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெற்று மதிப்பீடு ரூ.36,416/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3721**

**அனுமதிக்கப்படுறது.**

<u>பொருள் எண்.8</u>

மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில் அவர்களின் ஆய்வு கூட்டம் நாள் 10-08-2021-ன் அறிவுரைபடி, நகராட்சிக்குட்பட்ட வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மழைநீர் வடிகாலில் கல்க்காமல், வீட்டின் ஒரு பகுதியிலேயே உறிஞ்சுகுழி அமைத்து கழிவுநீர் விட

அறிவிப்பு வழங்க வேண்டி,Co-operative printing press மூலம் அறிவிப்பு அச்சடித்து பெறப்பட்ட வகையில் ரூ.1768/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3722**

**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.9**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN.75M.8752-க்கு கிளச்சு சிலிண்டர் பழுதாகி உள்ளதை சரி செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1. மாதர் மோட்டார்ஸ் - ரூ.10,207/-
   வெள்ளமடம்.

2. அஷயா மோட்டார்ஸ், - ரூ.11,812/-
   குலசேகரம் ரோடு,

   உண்ணாமலைகடை.

3. கணேஷ் மோட்டார்ஸ், - ரூ. 9,098/-
   செட்டிகுளம்.

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3-ல் கணேஷ் மோட்டார்ஸ் நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு முன் அனுமதி பெற்று வேலை செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3723**

**அங்கீகரிக்கப்படுறது.**

**பொருள் எண்.10**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு பெற்ற திரு.பி. தேவராஜன் என்பவர் பெயரில் வைப்புத் தொகை ரூ.1650/- உள்ளது.

மேற்படி தொகை காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் திருப்பி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு.- அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1267/2020/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3724**
**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.11**

அரசு ஆணை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள் 19-04-2021-ன்படி 2021-2022-ம் ஆண்டிற்கான நகராட்சி பங்குத் தொகை ரூ.30,000/- (ரூபாய் முப்பது ஆயிரம் மட்டும்) கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.526/2012/சி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3725**
**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.12**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்வதற்கு தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 7 எண்ணம் மின் மோட்டார்கள், சப்பாத்து நீரேற்று நிலையத்திலுள்ள 15H.P. Submersible Motor, இடைக்குளம் நீரேற்று நிலையத்தில் 15H.P. Submersible Motor, 21 வார்டுகளிலும் குடிநிர் பயன்பாட்டிற்கு இல்லாத இதர உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள 1.00H.P., 1½H.P., 2.00H.P. Compressor Motor-கள் 1H.P., 1½H.P. Jet Motors ஆகியவற்றில் பழுது ஏற்படும் காலங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகராட்சிக்கு போதிய மின்பணியாளர்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் பணியின் அவசியம் கருதி

குடிநீர் தடையின்றி வழங்குவதற்கு மேற்கண்ட மோட்டார்கள் பராமரிப்பு செய்வதற்கு ரூ.9,90,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3726**
**அனுமதிக்கப்படுறது.**

ஒப்பம்/- திரு.என். ராஜமாணிக்கம்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/.உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.